**THE OPEN UNIVERSITY OF SRI LANKA**

**LLB DEGREE PROGRAMME - LEVEL 5**

**1ST CONTINUOUS ASSIGNMENT TEST - 2015/2016**

**ADMINISTRATIVE LAW - LWU 3311**

**DURATION - 1 HOUR**

---

**Date: 01st November 2016** **Time:9.00 Am – 10.00 AM**

---

**Students will be penalized for illegible handwriting.**

**Answer one (01) question only.**

1.Lakna Ayurvedic Medicine Corporation was established in 1990 under the provisions of State Ayurveda Act. No. 49 of 1985. The Corporation is the sole manufacture of Ayurvedic drugs in the country. It is also responsible for the sale, distribution of Ayurvedic drugs and pharmaceuticals. It manufactures a variety of items made from medicinal plants.

Section 4(2) of the Act empowers the Minister to issue as well as revoke permits to purchase raw ayurvedic drugs and import machinery, equipment and accessories for ayurvedic medicine preparation. The Act further states that permits should only be issued to registered local suppliers approved by the Medical Board established under section 4(4) of the Act in order to protect the quality and safety of the product.

Recently the Corporation restructured their commercial activities and launched a project to export the locally manufactured drugs to foreign countries. The Chairman of the Corporation entered into an agreement with a foreign company and issued this company with a permit to import raw materials. The Chairman revoked the permit given to 'Herbal Lakna', a locally registered company approved by the Medical Board on the ground that the company is supplying artificial and low quality raw materials.

(contd.)

'Herbal Lakna'Company wishes to challenge the decision of the Chairman.

Advise them. Your answer should be supported with relevant legal principles and case law.

(20 Marks)

2. "An administrative act or order which is *ultra vires* or outside jurisdiction is void in law, i.e., deprived of legal effect. This is because an order to be valid it needs statutory authorization, and if it is not within the powers given by the Act, it has no leg to stand on…"

Dr.RanarajaJ.,*Surveyor's Institute of Sri Lanka v Acting Surveyor General (1998)1SLR 266,272*

Critically discuss the above statement. Your answer should be supported with recent developments made by the court in relation to the doctrine of *ultra vires*. (20 Marks)

- Copyright reserved -

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்
சட்டமாணி பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 5
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - I 2015/2016
நிர்வாகச் சட்டம் – LWU3311
காலம்: ஒரு (01) மணித்தியாலயம்

திகதி : 01 நவம்பர், 2016 நேரம்: மு.ப 09.00 – மு.ப 10.00

**ஒரு (01) வினாவுக்கு மாத்திரம் விடையளிக்குக**
**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

01. 1985 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 1990 ஆம் ஆண்டில் லக்ன ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கூட்டுத்தாபனம் நாட்டின் ஆயுர்வேத மருந்துப்பொருட்களை உற்பத்தி செய்யும் ஏக உற்பத்தி நிறுவனமாகும். மேலும், ஆயுர்வேதப் பொருட்கள் மற்றும் மருந்துகளது விற்பனை, விநியோகம் என்பனவற்றுக்கும் பொறுப்பாகவுள்ளது. இக்கூட்டுத்தாபனம் பல்வேறுபட்ட பொருட்களை மூலிகைத் தாவரங்களில் இருந்து உற்பத்தி செய்கிறது.

மேற்கூறப்பட்ட சட்டத்தினது பிரிவு 4(2) ஆனது, ஆயுர்வேத மூலப்பொருட்களின் கொள்வனவு மற்றும் ஆயுர்வேத மருந்து வகைகள் தயாரிப்புக்கான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களது இறக்குமதி என்பவற்றுக்கு அனுமதிப்பத்திரம் வழங்க மற்றும் இரத்துச் செய்வதற்கான அதிகாரத்தினை அமைச்சருக்கு வழங்குகிறது. இச்சட்டமானது, மேலும் உற்பத்தியினது தரம் மற்றும் காப்பு என்பவற்றைப் பாதுகாப்பதற்காக, பிரிவு 4(4) கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மருத்துவச் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டதும், பதிவுசெய்யப்பட்டதுமான உள்நாட்டு வழங்குநர்களுக்கே அத்தகைய அனுமதி வழங்கப்படுதல் வேண்டுமென குறிப்பிடுகிறது.

அண்மையில் கூட்டுத்தாபனமானது, அதனுடைய வர்த்தக செயற்பாடுகளை மறுகட்டமைத்ததுடன், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப்பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்றிட்டம் ஒன்றினையும் ஆரம்பித்தது. கூட்டுத்தாபனத் தலைவர் வெளிநாட்டுக் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை ஒன்றினுள் நுழைந்ததோடு, மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்காக அவ் வெளிநாட்டுக் கம்பனிக்கு அனுமதியையும் வழங்கினார். மேலும், மருத்துவச் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு, உள்நாட்டில் பதிவு செய்யப்பட்ட கம்பனியான “ஹேபள் லங்கா” விற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரத்தை, அக்கம்பனி செயற்கையான மற்றும் குறைந்த தரத்தினுடைய மூலப்பொருட்களை விநியோகம் செய்தது எனும் அடிப்படையில் கூட்டுத்தாபனத் தலைவர் இரத்துச் செய்தார்.

“ஹேபள் லங்கா” கம்பனியானது, கூட்டுத்தாபனத் தலைவருடைய தீர்மானத்தை கேள்விக்குட்படுத்த விரும்புகிறது.

அவர்களுக்கு ஆலோசனை வழங்குக. உமது விடை இயைபான சட்டக் கோட்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

(20 புள்ளிகள்)

02. “வலுவிகழ்ந்த அல்லது நியாயாதிக்கத்திற்கு வெளியேயான ஓர் நிர்வாகச் செயல் அல்லது கட்டளை என்பன சட்டத்தின் கீழ் வெற்றானதாகும். அதாவது, சட்ட விளைவினை இழந்துவிட்ட ஒன்றாகும். ஏனெனில் ஓர் கட்டளை வலிதாக்கப்படுவதற்கு நியதிச் சட்ட வலுவாக்கம் தேவைப்படுவதுடன், அது சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரத்திற்குள் இல்லையேல், நிலைப்பதற்கான வாய்ப்பைக் கொண்டிருக்காது…”

Dr.Ranaraja J., *Surveyor's Institute of Sri Lanka v Acting Surveyor General* (1988)1SLR 266, 272

மேற்கூறப்பட்ட கூற்றினை தர்க்க ரீதியாக ஆராய்க. உமது விடையானது, வலுவிகழ்தல் கோட்பாடு தொடர்பில் நீதிமன்றங்களால் மேற்கொள்ளப்பட்ட அண்மைய அபிவிருத்திகளைக் கொண்டு ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

(20 புள்ளிகள்)

*--பதிப்புரிமை பெற்றது--*